**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.எஸ்.சப்னா,B.B.M.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி திங்கள் 25 ஆம் நாள்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 135/2018**
**CNR No.TNTI11 001091 2018**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
அவினாசிபாளையம், காவல்நிலையம்,
குற்ற எண்.507/2016) ... புகார்தாரர்

– எதிர் –

அகமதுல்லா (வயது 26)
த/பெ. நூருல்ஹக்,
20 ஏ, முகமது தெற்கு வீதி,
கீரனூர், திண்டுக்கல் மாவட்டம். ... எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.135/2018**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021)படியும் விதி 106 Criminal Rules of Practice –2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Ahamedullah | 02.09.2016 | 02.09.2016 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 26.08.2016 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் தேதியன்று 23.04.2018 தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 279, 338,304(A) of IPC as the case may be | 24.10.2018 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | Cmp.No.1931/2025 | 04.08.2025 | Allowed |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Muthusamy | 16.03.2022 | 16.03.2022 |
| | | PW2- Bharathy | 16.03.2022 | 16.03.2022 |
| | | PW3 – Loganathan | 16.03.2022 | 16.03.2022 |
| | | PW4- Ravichandran | 16.03.2022 | 16.03.2022 |
| | | PW5- Saravanan | 16.03.2022 | 20.01.2026 |
| | | PW6- Loganathan | 16.03.2022 | 16.03.2022 |
| | | PW7-Ponnusamy | 21.05.2025 | 21.05.2025 |
| | | PW8- Muniyappan | 21.05.2025 | 21.05.2025 |
| | | PW9- Ramasamy | 07.07.2025 | 07.07.2025 |
| | | PW10- Kurshith begam | 12.08.2025 | - |
| | | Pw11- Arusamy | 19.11.2025 | 23.02.2026 |
| vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 25.11.2025 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 24.04.2018–ஆம் தேதி CC.No.135/2018–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.செந்தில் குமார் அவர்களும், எதிரிக்காக எதிரிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியும் கடந்த 24.02.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இருதரப்பும் கேட்கப்பட்டு,ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1)கடந்த 25.08.2016 ம் தேதி 16.45 மணிக்கு அவினாசிபாளையம் பகுதிக்குட்பட்ட தாராபுரம் – திருப்பூர் தென்வடல் ரோடு வேலம்பட்டி பள்ளக்காட்டு தோட்டம் அருகே எதிரி TN 30 AA 9100 என்ற எண்ணுள்ள செவர்லெட் ஸ்பார்க் காரினை தாராபுரம் – திருப்பூர் தென்வடல் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் அவருக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்த வேண்டி வலதுபுறமாக ஏறி ஓட்டி சென்று அதே ரோட்டில் எதிர் திசையில்

தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 39 AD 0478 என்ற எண்ணுள்ள டிவிஎஸ் விக்டர் பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், மேற்படி விபத்தில் TVS Victor பைக்கின் பின்னால் உட்கார்ந்து சென்ற சாட்சி 7 சரவணன் என்பவருக்கும் காரில் பயணம் செய்த சாட்சி–8 குர்ஷித் பேகம் என்பவருக்கும் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், TVS Victor நோக்கி ஓட்டி சென்ற கார்த்திக் என்பவருக்கு பலத்த காயத்தினை ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்தியதாக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279, 338(2counts), 304(A)இதசவின் கீழ் பல்லடம், காவல் நிலைய காவல்ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

**<u>குற்றத்தின் சாராம்சத்தையும் குற்றத்தினையும் விவரித்தல்:</u>**

3)எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,338(2counts), 304(A)இதசவின் கீழான குற்றம் பற்றி, விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப் பட்டது.

4)அதன்படி, அரசுதரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 17 வரை பட்டியலிடப் பட்டு, எதிரி மீதான குற்றத்தினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப் பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**<u>5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கானது பொங்கலூர், தேவணம்பாளையம், காட்டுபாளையம், ஆத்திக் காட்டு தோட்டத்தை சேர்ந்த முத்துசாமி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப் பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் பெரியகாட்டுபாளையத்தில்

அவரது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும் அவர் விவசாயம் செய்து வருவதாகவும் அவருக்கு திருமணமாகி பாரதி, கார்த்தி என்ற இரண்டு மகன்கள் உள்ளதாகவும் அவரது இளைய மகன் கார்த்தி அவினாசிபாளையத்தில் உள்ள ஜெய்ஸ்ரீராம் பொறியியல்கல்லூரியில் BE.Civil Engineering இறுதியாண்டு படித்து வருவதாகவும் கடந்த 24.08.2016 ம் தேதி சிவில் என்ஜினியரிங் படிக்கும் மாணவர்கள் காம்படிசனில் கலந்து கொள்ள திருச்சிக்கு சென்று வந்ததால் 25.08.2016 ம் தேதி காலை சிவில் என்ஜினியரிங் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் வகுப்பு உள்ளதாக கார்த்தி அவர்களிடம் சொல்லிவிட்டு கல்லூரிக்கு புறப்பட்டு சென்றதாகவும் மாலை 5.00 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டிலிருந்தபோது அவருக்கு தெரிந்த வேலம்பட்டி பள்ளகாட்டு தோட்டத்தை சேர்ந்த முத்துசாமி மகன் நடராஜ் என்பவருக்கு போன் செய்து அவரது மகன் கார்த்திக் TN 39 AD 0478 என்ற TVS Victor பைக்கில் உடன்படிக்கும் ஆண்டிபாளையத்தை சேர்ந்த ராமசாமி மகன் சரவணன் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு தாராபுரம் – திருப்பூர் தென்வடல் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கி நோக்கி ரோட்டின் இடது ஓரமாக வேலம்பட்டி பள்ளக்காட்டு தோட்டம் அருகே வந்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் எதிர்திசையில் வந்த TN 30 AA 9100 என்ற செவர்லேட் காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிக்கொண்டு அவருக்கு முன்பாக சென்ற வாகனத்தை முந்த வேண்டி அதே வேகத்தில் அவருக்கு வலதுபுறமாக ஏறிவந்து அவரது மகன் ஓட்டிவந்த பைக்கின் மீது நேருக்கு நேர் மோதி விபத்தை ஏற்படுத்தியதில் அவரது மகனும் பின்னால் அமர்ந்திருந்த சரவணனும் பைக்குடன் தூக்கி வீசப்பட்டு ரோட்டில் இருந்த பள்ளத்திற்குள் விழுந்துவிட்டதாகவும் அதை பார்த்த அ.சா.1 ம் ரோட்டின் கிழபுறம் தோட்டத்தில் இருந்த பொன்னுசாமியும் ஓடிவந்து பார்த்து அங்கு இருந்த நபர்கள் உதவியுடன் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் குமரன் மருத்துவமனைக்கு காயம்பட்ட கார்த்தி, சரவணன் ஆகியோரை அனுப்பி வைத்ததாகவும் விபத்து நடக்கும்போது சுமார் 4.45 மணி இருக்கும் என்று சொன்னதாகவும் அ.சா.1 உடனே குமரன் மருத்துவமனைக்கு சென்று அவரது மகனை பார்க்க அவனுக்கு வலது கை, வலது கால், தொடை மற்றும் பாதம் ஆகிய இடங்களில் பலத்த இரத்த காயமும் சரவணனுக்கு வலது தொடையில் பலத்த இரத்த காயமும்,

வலது கையில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு இருந்தது. அப்போது அங்கு வந்த நடராஜிடம் விபத்து ஏற்படுத்திய கார் ஓட்டுநர் யார் என்று விசாரிக்க பழனி பக்கம் உள்ள கீரனர் தெற்கு வீதியை சேர்ந்த நூசல்ஹக் மகன் அகமதுல்லா என்றும் காரில் வந்த அவரது பாட்டியும் அடிபட்டுவிட்டதாக விபத்து நடந்த இடத்தில் அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டதாக சொன்னார்கள் என்றும் ஸ்ரீகுமரன் மருத்துவமனையில் முதல் சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்கு அவரது மகனையும், சரவணனையும் கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்த்தபோது டாக்டர் அ.சா.1 ன் மகனை பரிசோதித்து பார்த்துவிட்டு அவன் இறந்துவிட்டதாக விபரம் சொன்னார் கடந்த 26.08.2016 ம் தேதி அவினாசிபாளையம் காவல்நிலையம் வந்து அ.சா.ஆ.1 புகார் கொடுத்து கார் ஓட்டுநர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

6)இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.5 சரவணன், அ.சா.7 பொன்னுசாமி, அ.சா.9 ராமசாமி மற்றும் அ.சா.10 குர்ஷித்பேகம் என்பவரும், வழக்கு விபத்தில் இறந்துபோனவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியாக அ.சா2 பாரதி, அ.சா.3 லோகநாதன் மற்றும் அ.சா.4 ரவிசந்திரன் என்பவரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.6 லோகதநான் என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7)இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.8 முனியப்பன், காவல் உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 26.08.2016 ம் தேதி அவினாசி பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராகநிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது ஆதிகாட்டு பாளையத்தை சேர்ந்த பொன்னுசாமி மகன் முத்துசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அவினாசி பாளையம் காவல் நிலைய குற்ற எண். 507/2016 சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அசல் முதல் தகவல் அறிக்கையினையும், வாதியின் புகாரினையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக கூறியுள்ளார்.

8)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.11 ஆறுச்சாமி, காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 26.08.2016 ம் தேதி அவினாசிபாளைய காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அவினாசிபாளைய குற்ற எண்.

507/2016 சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A)இதச வழக்கினை அப்போதைய காமநாயக்கன் பாளைய ஆய்வாளர் திரு. தெய்வசிகாமணி என்பவர் அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக பணி செய்த போது மேற்படி இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.08.2016 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி ராமசாமி என்பவர் சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் லோகநாதன்,. சிவசாமி, ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் பின்னர் சாட்சிகள் லோகநாதன்,. சிவசாமி, ராமசாமி, ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் அன்றே காலை 8.30 மணிக்கு பல்லடம் அரசு மருத்துவ மனை சென்று இவ்வழக்கில் இறந்து போன கார்த்தி என்பவர் பிரேத்தின் முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை பிரேத விசாரனை செய்து அ.சா..ஆ.5 அறிக்கை தயார் செய்ததாகவும் பின்னர் பிரேதத்தினை பரிசோதனை செய்ய வேண்டி காவலர் கருப்புசாமி என்பவர் மூலம் அனுப்பி வைத்ததாகவும் பின்னர் சாட்சிகள் முத்துசாமி, பொன்னுசாமி, பாராதி. லோகநாதன், ரவிச்சந்திரன். ஆகியோரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் பின்பு 28.08.2016 ம் தேதி கோவை கே.எம்.சி.எச், மருத்துவமனை முன்பு அங்கு சிகிச்சையில் இருந்த சாட்சி குர்சித் பேகம் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாவும் பின்பு 02.09.2016 ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 30 AA 9100 பதிவெண் உள்ள Swari Car அதனை ஓட்டி வந்த எதிரி அகமதுல்லா என்பவரையும் கைது செய்து தக்க பிணையில் விடுவித்ததாகவும் மேற்படி காரை 20.09.2016 ம் தேதி மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்ததாகவும் பின்பு 17.10.2016 ம் தேதி விபத்தில் இறந்துபோனவர் ஓட்டி வந்த TN 39 AD 0478 TVS மோட்டார் வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்ததாகவும் இவ்வழக்கினை நான் கடந்த 29.03.2018 ம் தேதி அவினாசி பாளைய காவல்நிலையத்தில் புலன் விசாரணை எடுத்துக் கொண்டு வழக்கின் சம்பவ இடம் சென்று விசாரணை செய்தபோது அங்கு சாட்சிகள் ஆய்வாளர் தெய்வசிகாமணி கூறிய விபரத்தையே தன்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் பின்னர் இவ்வழக்கின்

இறந்துபோன கார்த்தி என்பவரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வித்யா முருகன் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் கோவை கங்கா மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம் பெற்று சரவணன் என்பவரின் அ.சா.ஆ.8 காயச்சான்றிதழ் பெற்று மருத்துவர் ராய்வில்சன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் கோவை கே.எம்.சி.எச் மருத்துவமனை சென்று மருத்துவமனை மருத்துவர் கேசவ மூர்த்தி என்பவரை விசாரித்து குர்சித் பேகம் என்பவரின் அ.சா.ஆ.9 காயச்சான்று பெற்று பதிவு செய்ததாகவும் பின்னர் திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் வந்து இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த TN 30 AA 9100 மற்றும் இவ்வழக்கில் இறந்து போனவர் ஓட்டி வந்த TN 39 AD 0478 TVS வாகனத்தினை ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. நடேசன் என்பவரை விசாரித்து செய்து அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆய்வறிக்கைகள் பெற்று வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் பின்பு இவ்வழக்கினை புலன் விசாரணை 29.03.2018 ம் தேதி முடித்து எதிரி மீது சட்டபிரிவு 279,338,304(A) இதச–பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

**<u>9)கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில்:</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b)பிரிவின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப் பட்டது.

**<u>10)அரசு தரப்பு வாதம்:</u>**

அ.சா.1 முதல் அ.சா.7 மற்றும்அ.சா.9 மற்றும் அ.சா.10 வரையிலான சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.8 மற்றும் புலன் விசாரணை செய்த அதிகாரியான அ.சா.11 ன் சாட்சியத்தின் மூலம் அரசுதரப்பு வழக்கு மற்றும் அரசுதரப்பு சான்றாவணங்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 279, 338(2counts), 304(A) இதசவின் கீழான குற்றம்

நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாகவும், எனவே எதிரிக்கு பிரிவுகள் 279, 338, 304(A) இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**11)எதிரி தரப்பு வாதம்:**

இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 240ன் கீழ் வினவியபோது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அதில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(i)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய்சாட்சிகள் என்று கூறி அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்து உள்ளார்.

12)மேலும் எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்கு விபத்தானது எவ்வாறு யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதாக அரசுத்தரப்பில் தகுதிநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

13)இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது அ.சா.1 முத்துச்சாமி அவரது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோன கார்த்தி தனது மகன் என்றும் கடந்த 25.08.2016ம் தேதியன்று மாலை 4.45 மணியளவில் அவரது மகன் கார்த்திக் TN 39 AD 0478 என்ற பதிவெண் கொண்ட விக்டர் இருசக்கர வாகனத்தில் திருப்பூர் – தாராபுரம் ரோட்டில் வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது பள்ளகாட்டு தோட்டம் அருகே TN 30 AA 9100 என்ற பதிவெண் கொண்ட கார்

ஒன்று அவரது மகன் மீது மோதியதில் அவரது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விபட்டு உடனடியாக குமரன் மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும் அங்கு அவரது மகனுக்கு வலது கை நொறுங்கிபோய் இருந்தது கால் தோள்பட்டையில் அடிபட்டிருந்தது வலதுபுறம் முழுவதும் அடிபட்டிருந்தது பின்னர் மேல்சிகிச்சைக்காக அவரது மகனை கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் மருத்துவ மனைக்கு செல்லும் வழியிலேயே அவரது மகன் இறந்துவிட்டதால் இதுகுறித்து அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும் அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறிவிட்டு அவரது குறுக்கு விசாரணையில் தான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளதாகவும் புகாரில் உள்ள விவரம் எதுவும் தெரியாது என்பதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.ஆ.1 ஆவணத்தின் உண்மைத்தன்மை நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14)இவ்வழக்கு விபத்தில் இறந்துபோனவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா2 பாரதி விபத்தில் இறந்துபோன கார்த்தி தனது தம்பி என்றும் கடந்த 25.08.2016 ம் தேதியன்று மாலை 4.45 மணியளவில் அவரது தம்பி கார்த்திக் கல்லூரிக்கு சென்றுவிட்டு வேலம்பட்டி, புளியங்காட்டுத் தோட்டம் அருகே TN 39 AD 0478 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் விக்டர் இருசக்கர வாகனத்தில் திருப்பூர் – தாராபுரம் ரோட்டில் வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது TN 30 AA 9100 என்ற பதிவெண் கொண்ட செவர்லேட் ஸ்பார்க் கார் ஒன்று வேகமாக வந்து அவரது தம்பி மீது மோதியதில் அவரது தம்பிக்கு விபத்து ஏற்பட்டதாக அவரது அப்பா சொன்னார் அ.சா.2 சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டு பிறகு குமரன் மருத்துவ மனைக்கு சென்று பார்த்ததாகவும் அங்கு செல்வதற்குள் அவரது தம்பியை சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்ததாகவும் அ.சா.2 கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்று அவரது தம்பியை பார்த்தபோது வரும் வழியிலேயே இறந்து விட்டதாக சொன்னார்கள் பின்பு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவரது தம்பிக்கு கை, தோள்பட்டை, கால் ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது இதுகுறித்து அவினாசிபாளையம் காவல்நிலையத்தில் அவரது அப்பா புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

15)அ.சா.3 லோகநாதன் விபத்தில் இறந்து போன கார்த்தி தனது அத்தையின் பேரன் என்றும் கடந்த 25.08.2016 ம் தேதியன்று மாலை 4.45 மணியளவில் வேலம் பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் கார்த்திக் கல்லூரிக்கு சென்றுவிட்டு திரும்ப வந்து கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள் அ.சா.3 வீட்டிலிருந்து கிளம்பி கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும் கோவை கங்கா மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே கார்த்திக் இறந்துவிட்டதாக சொன்னார்கள் போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்தபோது கார்த்திக் உடலை அடையாளம் காண்பித்ததாகவும் பிரேத விசாரணையின்போது உடனிருந்ததாக கூறியுள்ளார்.

16)அ.சா.4 ரவிசந்திரன் அவரது சாட்சியத்தில் இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் அவரது உறவினர் என்றும் கடந்த 25.08.2016 ம் தேதியன்று மாலை 4.45 மணியளவில் வேலம் பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் கார்த்திக் கல்லூரிக்கு சென்றுவிட்டு திரும்ப வந்து கொண்டிருந்தபோது செவர்லேட் கார் ஒன்று கார்த்திக் மீது மோதி விபத்தை ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள் அ.சா.4 சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அவரை திருப்பூர் குமரன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தார்கள் அன்று இரவு கார்த்திக் உடலை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள் அ.சா.4 அங்கு வைத்து பார்த்ததாகவும் போலீசார் மருத்துவ மனைக்கு வந்து விசாரணை செய்தபோது கார்த்திக் உடலை அடையாளம் காண்பித்ததாகவும் பிரேத விசாரணையின் போது உடனிருந்ததாக கூறியுள்ளார்.

17)அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அவர்களது சாட்சியத்தில் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன கார்த்திக் என்பவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்ததாகவும் அவர் தங்களுக்கு உறவினர் என்பதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்களது சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில் எதுவும் பெறப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18)இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 சரவணன் அவரது சாட்சியத்தில் இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் தனது நண்பர் என்றும் கடந்த

25.08.2016 அன்று மாலை 4.45 மணியளவில் அ.சா.5ம் கார்த்திக்கும் வேலம்பட்டி அருகே பள்ளக்காட்டு தோட்டம் அருகே TN 39 AD 0478 TVS Victor இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்குநோக்கி சென்று கொண்டிருந்தபோது அவர்களுக்கு எதிரில் வந்த TN 30 AA 9100 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற செவர்லெட் கார் ஒன்று மற்றொரு வாகனத்தை முந்தி செல்ல முயன்றபோது அவர்கள் மீது மோதியதில் அவர் தூக்கி வீசப்பட்டதாகவும் அ.சா.5க்கு இடுப்பு கை மற்றும் வலதுபுறம் முழுவதுமாக அடிபட்டது என்றும் அ.சா.5 சிகிச்சைக்காக திருப்பூர் குமரன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பிறகு மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக 2 மாதங்கள் சிகிச்சையில் இருந்ததாகவும் அதன்பிறகு 6 மாதங்கள் நடக்கமுடியாமல் வீட்டிலேயே இருந்ததாகவும் பிறகு ஒரு வருடத்திற்கு குச்சியை ஊன்றி தான் நடந்து கொண்டிருந்ததாகவும் கார்த்திக் வண்டியை ஓட்டியதால் முன்புறம் இருந்ததால் அவருக்கு வலதுபுறம் உடல் முழுவதுமாக அடிபட்டது கார்த்திக்கிற்கு குமரன் மருத்துவ மனையில் முதலுதவி அளிக்கப் பட்டு பின்பு கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டதாகவும் ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய நபர் என்று கூறியுள்ளார்.

19)மேலும், அ.சா.5 அவரது குறுக்குவிசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் தனக்கு விபத்து ஏற்பட்ட சில நாட்கள் கழித்து தான் தெரியும் என்றும் விழும் போது வாகனத்தின் பதிவு எண் பார்த்துவிட்டு தான் விழுந்ததாகவும் கூறியுள்ளார். விபத்து ஏற்படுத்திய வாகனமானது அரசு பேருந்தை முந்திக் கொண்டு வந்ததால் விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் மேற்படியான அரசு பேருந்தின் ஓட்டுநரையோ அல்லது அதில் பயணம் செய்த நபர்களையோ இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க வில்லை என்றும் ஆஜர் எதிரியின் பெயர் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஒரு நபர் வாகனம் மோதி தூக்கி வீசப்பட்டு அடிபட்ட போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் மற்றும் ஓட்டுநரை பார்த்தார் என்பது சற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20)இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான அ.சா.6 லோகநாதன் அவரது சாட்சியத்தில் கடந்த 25.08.2016ம் தேதியன்று மாலை 4.30– 4.45 மணியளவில் வேலம்பட்டி அருகே பள்ளக்காட்டு தோட்டம் அருகே கார்த்திக் மற்றும் சரவணன்

ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்தபோது எதிரே வந்த செவர்லேட் ஸ்பார்க் கார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் அடுத்தநாள் காலை சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்து பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் வாங்கியதாக கூறியுள்ளார். மேலும் அவரது குறக்குவிசாரணையில் அ.சா.6 கையொப்பம் செய்த பேப்பரில் மேப் வரைந்து வாகனம் மோதியது குறித்து அதில் எழுதப்பட்டிருந்தது என்று கூறியுள்ளார்.

21)அ.சா.7 பொன்னுசாமி அவரது சாட்சியத்தில் கடந்த 25.08.2016 ம் தேதி மாலை 4.45 மணியளவில் அ.சா.7 ம் அவரது பக்கத்து தோட்டத்துக்காரரான நடராஜ் என்கிற ராமசாமியும் திருப்பூர் – தாராபுரம் ரோட்டின் மேபுறம் நின்று பேசிக் கொண்டிருந்தபோது கார் ஒன்று வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்தபோது இருசக்கர வாகனத்தில் இரண் நபர்கள் வந்ததாகவும் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அந்த வேகத்தில் அருகில் இருந்த மரத்தின் மீது மோதியதில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் குழிக்குள் விழுந்து விட்டதாகவும் அ.சா.7 ம் ராமசாமி இருவரையும் குழியிலிருந்து தூக்கி ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்ததாகவும் இருசக்கர வாகனத்தை பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் வந்து ஒரு நபரின் அப்பா அ.சா.7 க்கு பழக்கம் என்பதால் அவருக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும் சிகிச்சைக்காக திருப்பூர் குமரன் மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்ததாகவும் மேல்சிகிச்சைக்காக கோவை கேஎம்சி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சிகிச்சையிலிருந்து கார்த்தி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் விபத்து ஏற்பட்டவுடன் விபத்தில் காயம்பட்ட நபர்களுக்கு முதலுதவி அளித்ததால் கார் ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபரை தான் பார்க்கவில்லை என்பதாக கூறியுள்ளார்.

22)மேலும் அவரது குறுக்கு விசாரணையில் போலீசார் தன்னை விபத்து நடந்ததற்கு மறுநாள் விசாரித்ததாகவும் விபத்து நடந்ததற்கு முன்பு அந்த வாகனத்திற்கு முன்பு எந்த வாகனம் சென்றது என்று தெரியாது என்றும் சத்தம் கேட்டு தான் பார்த்ததாகவும் சத்தம் கேட்டவுடன் பார்த்ததால் அந்த வாகனங்கள் என்ன வேகத்தில் வந்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் விபத்திற்குள்ளான வாகனங்களின் பதிவெண்கள் தனக்கு தெரியாது என்றும் விபத்தில் காயம்பட்ட நபர்

தனக்கு தெரிந்த நபர் என்று கூறியுள்ள நிலையில் அ.சா.7 ஐ கண்ணுற்ற சாட்சியாக ஏற்றுக்கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

23)அ.சா.9 ராமசாமி அவரது சாட்சியத்தில் கடந்த 25.08.2016 ம் தேதி மாலை 4.45 மணியளவில் அவரது பக்கத்து தோட்டக்காரர் பொன்னுசாமியும் தாராபுரம் – திருப்பூர் செல்லும் ரோட்டில் பல்லக்காட்டு தோட்டத்திற்கு முன்பாக நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தபோது கார்த்திக் சரவணன் ஆகிய இருவரும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி திருப்பூர் – தாராபுரம் ரோட்டில் வந்தபோது அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த கார் ஒன்று ரோட்டின் மேல்புறம் சென்று இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் அவர்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டதில் இருவருக்கும் காயம் ஏற்பட்டதில் மயங்க நிலையில் இருந்ததாகவும் அவர்களை அ.சா.9 ம் பொன்னுசாமியும் பார்த்து ஆம்புலன்ஸ் மூலமாக திருப்பூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அந்த காரின் பதிவெண் 9100 என்றும் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் கார்த்திக் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டதாகவும் சரவணனுக்கு கை கால் ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது என்றும் விபத்து ஏற்படுத்திய ஓட்டுநரை பார்த்ததாகவும் ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய நபர் என்று கூறியுள்ளார்.

24)மேலும், அ.சா.9 அவரது குறுக்குவிசாரணையில் சம்பவ இடத்திற்கும் அ.சா.9 நின்று கொண்டிருந்த இடத்திற்கும் இடையே சுமார் 70 அடி தூரம் இருந்தது என்றும் போலீசார் அ.சா.9 ஐ சம்பவம் நடந்து ½ மணி நேரத்தில் விசாரித்ததாக கூறியுள்ளார். ஆனால் அ.சா.9 உடன் நின்று பேசிக்கொண்டிருந்த அ.சா.7 பொன்னுசாமி சம்பவத்திற்கு மறுநாள் தான் விசாரித்ததாகவும் அவர்கள் சத்தம் கேட்டு தான் பார்த்ததாக கூறியுள்ள நிலையில் அ.சா.9 ஐ கண்ணுற்ற சாட்சியாக ஏற்றுக் கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

25)அ.சா.10 குர்ஷித்பேகம் அவரது சாட்சியத்தில் தான் கீரனூர் பழனி தாலுக்காவில் குடியிருந்து வருவதாகவும் ஆஜர் எதிரி அகமதுல்லா அவருடைய பேரன் என்றும் சுமார் 7–8 வருடங்களுக்கு முன்பு பேத்தி விசேஷத்திற்காக துணி எடுப்பதற்காக திருப்பூர் சென்னை சில்க்ஸ்க்கு வந்து துணி எடுத்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது காரை அவரது பேரன் அகமதுல்லா ஓட்டியதாகவும் காரில் அவரது கணவர் சம்சுதீனும் அ.சா.10 அவரது மகள் பௌசியா பானு பேத்தி

ஆகியோருடன் சென்று கொண்டிருந்த போது திருப்பூர் – தாராபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது ஸ்கூட்டி வந்து ரோட்டின் குறுக்கே அவர்கள் வண்டியின் மீது மோதியதில் காரில் வந்தவர்களுக்கு எல்லாருக்கும் சிறிய காயம் ஏற்பட்டது என்றும் ஸ்கூட்டியில் வந்தவர்களுக்கு என்ன ஆனது என்ற விவரம் தெரியாது என்பதாகவும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

26)அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.7 மற்றும் அ.சா.9 மற்றும் அ.சா.10 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றச் சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டிலிருந்து எதிரியை விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

27)முடிவில் எதிரி மீது இதச பிரிவுகள் 279,338(2counts),304(A)ன் கீழான குற்றச் சாட்டிலிருந்து குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

28)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப் பட்டது.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.09 19:56:47 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 16.03.2022 | திரு.முத்துச்சாமி த/பெ. பொன்னுச்சாமி –புகார்தாரர் |
| அ.சா.2 | 16.03.2022 | திரு.பாரதி த/பெ. முத்துசாமி – பிரேத விசாரணையின் போது உடனிருந்த சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.3 | 16.03.2022 | திரு.லோகநாதன் த/பெ. சுப்புராயன் – பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.4 | 16.03.2022 | திரு.ரவிச்சந்திரன் த/பெ. குப்புச்சாமி – பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.5 | 16.03.2022 | திரு.சரவணன் த/பெ.ராமசாமி– பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.6 | 16.03.2022 | திரு.லோகநாதன் த/பெ. கந்தசாமி – பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | 21.05.2025 | திரு.பொன்னுசாமி த/பெ. பழனிச்சாமி –கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.8 | 21.05.2025 | திரு.முனியப்பன், காவல் உதவி ஆய்வாளர் – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.9 | 07.07.2025 | திரு.ராமசாமி த/பெ. முத்துசாமி – கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.10 | 12.08.2025 | திரு.குர்ஷித்பேகம் த/பெ. சம்சுதீன் – கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.11 | 19.11.2025 | திரு.ஆறுச்சாமி, காவல் ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 26.08.2016 | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.6 | 26.08.2016 | பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3/அ.சா.8 | 26.08.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.11 | 26.08.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 /அ.சா.11 | 26.08.2016 | கார்த்தி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 /அ.சா.11 | 25.08.2016 | குர்சித் பேகம் என்பவரின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7/அ.சா.11 | 26.08.2016 | கார்த்தி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8/அ.சா.11 | 25.08.2016 | சரவணன் என்பவரின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9/அ.சா.11 | 25.08.2016 | குர்சித் பேகம் என்பவரின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.10/அ.சா.11 | 17.10.2016 | TN 39 AD 0478 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.11/அ.சா.11 | 20.09.2016 | TN 30 AA 9100 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்கள்:** இல்லை.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.03.09 19:56:56 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**குறிப்பு**

1) எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டார்.
2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப் படவில்லை.
5) தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.